# Vice Chancellor's Message



## செய்தி மடல்...

**‘தி’**ருவள்ளுவரின் பெயரில் தொடங்கப்பட்ட திருவள்ளுவர் பல்கலைக்கழகம் **“கண்உடையார் என்பவர் கற்றோர்”** என்னும் உயரிய நோக்கோடு கிழக்குத் தொடர்ச்சி மலைச் சாரலில் இயற்கை எழில் கொஞ்சும் வேலூர் மாவட்டத்தில் சென்னை சித்தூர் தேசிய நெடுஞ்சாலையில் 130 ஏக்கர் பரந்த நிலப்பரப்பில் கம்பீரமாக இயங்கி வருகிறது. தமிழகத்தில் மிக இளமையான வளர்ந்து வருகின்ற இப்பல்கலைக்கழகம் திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், மற்றும் வேலூர் ஆகிய நான்கு மாவட்டங்களை தன்னகத்தே கொண்டு இயங்கி வருகின்றது. இந்நான்கு மாவட்டங்களில் உள்ள பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட கல்வியில் பின்தங்கிய நிலையில் உள்ள அனைவருக்காகவும் மிகச் சிறப்பாக கல்விச் சேவை ஆற்றி வருகிறது. இம்மாவட்டங்களில் உள்ள பெற்றோர்கள்

**“ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும் தன்மகனைச்**
**சான்றோன் எனக்கேட்ட தாய்”**

எனும் குறளுக்கேற்ப மிகச் சிறந்த இடமாக திருவள்ளுவர் பல்கலைக்கழகம் திகழ்கிறது. இப்பல்கலைக்கழகம் கலை அறிவியல் துறைகளோடு வள்ளுவர் வகுத்தளித்த குறளின் கூற்றுப்படி ஒருவருக்கு கல்வி கற்பிக்கப் படுமேயானால் அது அவருக்கு ஏழுபிறப்பிற்கும் உடன் வரும் என்பதை,

**“ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து”**

என்னும் கருத்தின் வாயிலாக உறுதி செய்கிறார். அதில் சொல்லப்பட்ட ஏழு பிறப்புக்கு ஒப்பாக ஏழு துறைகளோடு சிறந்த கல்விப் பணியை செய்து வருகிறது.

**“அறிவுடையார் ஆவது அறிவார் அறிவிலார்**
**அ.்.தறி கல்லா தவர்”**

எனும் குறளின்படி எதிர்காலத் தேவைக்கான ஆராய்ச்சியினை மக்களுக்கும், தொழிற்சாலைகளுக்கும் பயன் தரும் வகையில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இவ்வாராய்ச்சி கல்வி பயின்ற மாணவர்களுக்கு தொழில் வாய்ப்பினை ஏற்படுத்தி தருகிறது.

திருவள்ளுவர் பல்கலைக்கழகம் உலகளாவிய பல்கலைக்கழகங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் ஆய்வு மாணவர்களை பரிமாறிக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. வெளிநாட்டுப் பல்கலைக்கழக மாணவர்கள் இங்கு வந்து உயர்கல்வி பயில்வதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தொலைநோக்கு திட்டமிடலோடு இனி வரும் காலங்களில் மேலும் பல ஆராய்ச்சித் துறைகளை உருவாக்கி மிகச் சிறந்த ஆய்வுகளை நிகழ்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் மூலமாக இப்பல்கலைக்கழகத்தை சர்வதேசத் தரத்திற்கு கொண்டு செல்ல இயலும் என்பது திண்ணம். இது தனி ஒருவரால் மட்டும் சாத்தியப்படுவதற்கில்லை. தலைச்சிறந்த மாணவர்களையும், சிறந்த ஆராய்ச்சியாளர்களை உருவாக்குவதனால் மட்டுமே சாத்தியமாகும்.

**“தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து**
**மன்னுயிர்க்கு எல்லாம் இனிது”**

எனும் வள்ளுவர் கூற்றுப்படி தன்னைவிட தம் மக்கள் அறிவு வளர்ச்சி பெற்றிருப்பது பெற்றோர்க்கு மட்டுமில்லாமல் நில உலகத்து எல்லா உயிர்களுக்கும் நன்மை தருவதாகும். இதனை மெய்ப்பிக்கும் வகையில் அனைவரும் உயர்கல்விப் பெற்று நம் பல்கலைக்கழகத்தை உயர்த்துவோம்.

**முனைவர் க.முருகன்**
**துணைவேந்தர்**